www.padippakam.com



# தமிழர் மதத்தை வேதமதம் விழுங்கிய வரலாறு

10

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

வரலாற்றுத் தொடர்

கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டைச் சார்ந்து இலங்கையில் மகாயான பௌத்தம் தீவிர வளர்ச்சி பெற்று வந்தது. அக்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற பௌத்த தர்க்கவியல் அறிஞரான திக்கு நாதர்; பௌத்த தத்துவத்திற்கு 14 உரை நூல்கள் எழுதியவரும் வட இந்தியாவின் நாலந்தா கலைக்கழகத்தின் தலைவராகப் பதவியேற்றுப் புகழடைந்தவருமான தர்மபாலர், ஆகியோர் இந்த வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியதாகச் சொல்லப்படுகிறது. இந்த இருவரும் காஞ்சி பௌத்த பள்ளியைச் சார்ந்த தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(1)

இலங்கையில் அனுராதபுரத்திலிருந்த அபயகிரி விகாரை, மகாயன பௌத்தத்தின் பிரதான நிலையமாக விளங்கியது. அனுராதபுர அரசும் கதிரமலை அரசும் அதை பாதுகாக்கும் அரசுகளாக விளங்கின. துட்ட காமினி காலத்தில் எழுச்சி பெற்று மகாசேனன் காலத்தில் முறியடிக்கப்பட்ட தேரவாதப் பிரிவினர் உருகுணைப் பகுதிகளுக்குப் பின்வாங்கிக் கொண்டனர். இக்கால கட்டத்தில் பௌத்தத்தின் இந்த இரு பிரிவுகளுக்கிடையிலும் மிக உக்கிரமான தத்துவார்த்த தர்க்க நியாய வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. தேரவாதப் பிரிவினர் பாளி மொழியிலும் மகாயானப் பிரிவினர் சமஸ்கிருதத்திலும் தத்துவார்த்த நூல்களையும் உரை நூல்களையும் எழுதியதாகச் சொல்லப்படுகின்றது.(2)


மகாயானப் பிரிவு சமஸ்கிருதத்தில் தத்துவார்த்த நூல்களையும் எழுதினால்; உரை நூல்களை மக்கள் வழக்கு மொழியான தமிழ் மொழியிலேயே எழுதியதாகவும் அந்தப் பிரிவைக் கடைப்பிடித்த மக்களின் மொழியிலேயே எழுதியதாகவும் அந்தப் பிரிவைக் கடைப்பிடித்த மக்களின் மொழி தமிழ் மொழியாகவுமே இருந்ததாக நம்பப்படுகின்றது.

**பெரும் யாகங்களையும் வேள்விகளையும் நடாத்தியே இறைவனை பூசிக்க வேண்டுமென்ற வேத மரபுகளுக்கு மாறாக; பௌத்த சமண மதங்களைப் போல மக்களின் பேச்சு மொழியிலேயே பாசுரங்களையும் தோத்திரங்களையும் பாடி இறைவனைப் பூசிக்க முடியும் என்ற புதிய நடைமுறையை ஆழ்வார்களதும், நாயன்மார்களதும் பக்தி இயக்கம் தோற்றுவித்தது. இந்த நிகழ்வானது, சிந்துவெளி காலத்திலிருந்து, இயற்கை வழிபாட்டையும், (சிவ) லிங்கவழிபாட்டையும் நால்வகை நிலப்பிரிவினை அடிப்படையிலான கன்னன், முருகன், காளி வழிபாடுகளையும் கொண்டிருந்த தமிழ் மக்களது வழிபாட்டுமுறைகளை ஆரிய வேத மதத்துக்குள் மிகத் தந்திரமாகவும், திட்டமிட்ட அடிப்படையிலும் அமிழ்ந்து போகச் செய்தது.**

ஆனால், தேரவாதத்தைக் கடைப்பிடித்தவர்கள்; முழுக்க முழுக்க பாளி மொழியிலேயே தத்துவார்த்தக் கருத்துக்களையும், அதற்கான உரைகளையும் கூட எழுதினார். மகாயானப் பிரிவினர் மீது அவர்கள் கொண்ட திராத வெறுப்பால் தமிழைப் புறந்தள்ளும் நோக்கில் பாளி மொழியை மதரீதியாக மக்கள் மத்தியில் திணித்ததால் ஏற்பட்ட கலப்பே சிங்களமொழி தோன்ற வழிவகுத்தது.

கி.பி. 5ம் நூற்றாண்டில் 6 தமிழர்கள் அனுராதபுரத்தில் அரசாண்டதாக சூளவம்சம் குறிப்பிடுகிறது. இவர்களில் பரிண்ட, தாதிகன் ஆகியோரது ஆட்சி உருகுணை (தென்னிலங்கை) வரையில் பரவியிருந்ததை கதிர்காமம், அறகம ஆகிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. (3) இந்தக் கல்வெட்டுக்களில் இவர்கள் பௌத்த மதத்திற்கு ஆற்றிய பணிகள் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டிலிருந்து வந்த புத்தகோசர், தர்மபாலர், புத்ததத்தர், ஜோதிபாலர் ஆகியோர் இலங்கையிலுள்ள விகாரைகளில் பௌத்த போதனைகளை நடத்தியதாகவும், பௌத்த உரை நூல்கள் பலவற்றை எழுதியதாகவும் சூளவம்சம் கூறுகிறது. (4)



இவ்வாறு பௌத்தம் இலங்கையிலும், தமிழகத்திலும் ஒரே நேரத்தில் பெரும் செல்வாக்குடன் பரவிவந்தபோது; அதனால் நேரடிப் பாதிப்புக்குள்ளானவர்கள் பிராமணியத்தை அடிப்படையாகக் கொண்ட வேத மதத்தினரான வைதிக இந்து மதத்தினரே. பிறப்பினால் மனிதனை மனிதன் இழிவு செய்த இவர்களது வர்ணக் கோட்பாடும், கற்பு, புனிதம், தீட்டு என்ற பெயரில் இவர்கள் கடைப்பிடித்த பெண்களுக்கெதிரான கறாரான அடக்கு முறையையும் இவர்களது இருப்பைக் கேள்விக்குறியாக்கிட. அக்காலத்தில் இவற்றுக்கெதிரான கருத்துக்களைக் கொண்டிருந்த பௌத்தமும் சமணமும் வழிவகுத்தன.

இந்நிலையில் வைதீக இந்து மதத்தினர் தங்களது இருத்தலை நிலைநிறுத்த பழைய கள்ளை புதிய மொந்தையில் கொடுப்பது போல் தங்களது பழைய தத்துவங்களையும், பழைய சாதிய மற்றும் உடன்கட்டை ஏறல் புனிதம், தீட்டு, துடக்கு முதலான அடிமைச் சம்பிரதாயங்களையும் பக்தி இயக்கம் என்ற பெயரில் தமிழ்மக்கள் மத்தியில் முன்வைத்தனர்.

பெரும் யாகங்களையும் வேள்விகளையும் நடாத்தியே இறைவனை பூசிக்க வேண்டுமென்ற வேத . மரபுகளுக்கு மாறாக; பௌத்த சமண மதங்களைப் போல மக்களின் பேச்சு மொழியிலேயே பாசுரங்களையும் தோத்திரங்களையும் பாடி இறைவனைப் பூசிக்க முடியும் என்ற புதிய நடைமுறையை ஆழ்வார்களதும், நாயன்மார்களதும் பக்தி இயக்கம் தோற்றுவித்தது. இந்த நிகழ்வானது, சிந்துவெளி காலத்திலிருந்து, இயற்கை வழிபாட்டையும், (சிவ) லிங்கவழிபாட்டையும் நால்வகை நிலப்பிரிவினை அடிப்படையிலான கண்ணன், முருகன், காளி வழிபாடுகளையும் கொண்டிருந்த தமிழ் மக்களது வழிபாட்டுமுறைகளை ஆரிய வேத மதத்துக்குள் மிகத் தந்திரமாகவும், திட்டமிட்ட அடிப்படையிலும் அமிழ்ந்து போகச் செய்தது.

வேதமதம் இவ்வாறு திட்டமிட்ட அடிப்படையில் மக்களை மயப்படுத்தப் பட்டபோது பௌத்தத்திற்கும் சமணத்திற்கும் எதிரான போராகவும் அது மாறியது பெரிய பெரிய விவாதங்களும், தர்க்க வாதங்களும் நிகழ்ந்தன. தமிழகத்தில் வைதீக மதத்தினருக்கும் பௌத்தர்களுக்கும் நடந்த தர்க்க விவாதத்தில் கலந்து கொள்வதற்காக, இலங்கையிலிருந்தும் பல பௌத்த பிக்குள் சென்றதாகச் சொல்லப்படுகிறது. (5)

திருஞான சம்பந்தர் பௌத்தர்கள் வாழ்ந்த போதி மங்கைக்கு வந்தபோது 'பரசமய கோளரி வந்தான்' என்று வைதீக இந்து மதத்தினர் கொண்டாட பௌத்தர்கள் தங்களது சமயக் கல்வியில் மேன்நிலையிலிருந்த புத்த நந்தியை அழைத்து வந்ததாகச் சொல்லப்படுகின்றது. சம்பந்தரது அடியாரான ஒருவர் பிள்ளையாரைத் தொழுது புத்த நந்தியின் தலையில் இடிவிழுக என்று வேண்ட அவ்வாறே புத்த நந்தி இடிவிழுந்து மாண்டாள் என்றும் அதைத் தொடர்ந்து “சாரிதத்தன்” என்ற. பௌத்தன் வாது செய்ய வந்து தோற்றான் என்றும் பெரியபுரானம் சொல்கிறது. மாணிக்கவாசகரது சரித்திரத்தைக் கூறும் திருவாரூர் அடிகள் புராணத்திலே சைவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் நடந்த தர்க்க வாதத்தில் மாணிக்கவாசகரோடு வாதம் செய்ய வந்த பௌத்த குரு இலங்கையிலிருந்து வந்தாரெனச் சொல்லப்படுகிறது. மாணிக்க வாசகர் பௌத்த குருவை வாதத்தில் வெல்ல முடியாமல் போன போது சரஸ்வதியைப் பிரார்த்தனை செய்து அவள் அருளால் பௌத்த குருவை பேசமுடியாத ஊமையாக்கியதாகச் சொல்லப்படுகிறது.(6)

திருஞானசம்பந்தரும் சரி, மாணிக்கவாசகரும் சரி பௌத்தர்களை வாதத்திறமையால் வெல்வதற்குப்பதில் சித்து வேலைகளைக் கொண்டே வென்றதாகச் சொல்லப்படுகிறது. இவர்களிடம் வாதத்தில் தோற்ற பௌத்தர்களையும், சமணர்களையும் கழுவேற்றியதாகவும் அறிய முடிகிறது.

வைதிக இந்து மதத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த சமண பௌத்த எதிர்ப்பு நடவடிக்கையால் பாதிப்புக்குள்ளான ஏராளமான பௌத்தர்கள் நாடுகடத்தப்பட்ட நிலையிலும் கழுவேற்றல் முதலான கொலைத் தண்டனைக்குத் தப்பி ஓடிய நிலையில் இலங்கையில் தஞ்சமடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

1. பேராசிரியர் கா.இந்திரபாலா தமிழ் நாட்டுப் பௌத்தத்தின் செல்வாக்கு - வீரகேசரி கட்டுரை
2. மயிலை சினி வேங்கடசாமி - பௌத மும் தர்மமும்
3. பேராசிரியர் பபுஷ்பரட்ணம் - ஆதிகால இலங்கைத் தமிழர் வரலாறு.
4, 5. பேராசியர் கா.இந்திரபாலா தமிழ் நாட்டு பௌத்தத்தின் செல்வாக்கு.
6. பேராசியர் ஆ. வேலுப்பிள்ளை தமிழர் சமய வரலாறு.

- நக்கீரன்